விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–12.35 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –01.05 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : DVC.1/2024**

**Prosecution witness : ம.சா.1** **Date : 16.11.2024**

| | |
|---|---|
| **Name : நந்தினி** | **Taluk : மேட்டுர்** |
| **Father Name : சித்தையன்** | **Calling : –** |
| **Village : தாணாவதியூர்** | **Age : 23** |

(Complainant present. Respondent absent. Filed petition and allowed)

எதிரி தரப்பில் கு.வி.மு.ச 311 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனது வீட்டுக்காரர் கட்டிய தாலி தற்போது கழுத்தில் அணிந்துள்ளேன் என்றால் சரிதான். தாலியை பிடிங்கிகொண்டு மறுபடியும் கல்யாணம் முன் நின்றவர்களை வைத்து பேசி வாங்கிகொண்டேன். தாலி எப்போது என் கழுத்தில் தான் உள்ளது எதிர்மனுதாரர் என்னிடமிருந்து பிடுங்கியாதாக சொல்லப்படுவது பொய் என்றால் சரியல்ல. திருமணத்தில் போது எதிர்மனுதாரர் 1 பவுன் தாலியும், 4 பவுனில் கொடியும் எனக்கு அனிவித்தார் என்றால் சரியல்ல. தாலி 1 பவுனா என்று தெரியவில்லை. மஞ்சள் கயிற்றில் தாலி கட்டினார். தாலியை திரும்பி வாங்கி கொடுத்தனர் என்று நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலோ, மனுவிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கல்யாணம் முன் நின்று செய்தவர்களை வைத்து

பேசி தான் தாலியை வாங்கினோம் மற்றும் சேர்ந்து வாழ அனுப்பி வைத்தார்கள். 08.09.2022 திருமணம் கோயிலில் நடந்து 17.09.2022 ம் தேதி வரவேற்பு நடைப்பெற்றது. திருமணத்தன்று திருமணம் முடிந்த பிறகு எதிர்மனுதாரரின் வீட்டில் தான் விருந்து நடைப்பெற்றது என்றால் சரிதான். ஆனால் இருவீட்டாரும் செலவு சரிபாதியாக பிரித்துக்கொண்டனர். திருமணத்தின் போது நடைப்பெற்ற விருந்து உட்பட்ட அனைத்து செலவுகளையும் எதிர்மனுதாரர் தான் செய்தார்கள் என்றால் இல்லை. இரண்டு வீட்டாரும் சரி பாதியாக செலவு செய்தோம். திருமணத்தின் போது தாலி கொடியுடன் 5 பவுன் மற்றும் அரை பவுன் மோதிரன் எதிர்மனுதாரர் அணிவித்தார் என்றால் சரியல்ல. என் பெற்றோர் எதிர்மனுதாரருக்கு எந்த நகையும் அணிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் பெற்றோர் எனக்கு 8 பவுன் மற்றும் எதிர்மனுதாரருக்கு கைக்கு பிரேசல்ட் 1 பவுன் அணிவித்தார்கள். எதிர்மனுதாரருக்கு பிரேசல்ட் 1 பவுன் அணிவித்தோம் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஒரு பவுன் என்று மட்டும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்க்கு 64 கிராம் தங்க நகையும் எதிர்மனுதாரருக்கு 8 கிராம் தங்க நகையும் என் பெற்றோர் அணிவித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொதுவான வழக்கத்தில் தங்க நகைகளை கிராம் கணக்கில் சொல்லமாட்டார்கள் என்றும் பவுன் என்று தான் சொல்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. 120 கிராம் தங்க நகைகளை கூடுதலாக எதிர்மனுதாரர் கேட்டதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வ.சா.ஆ.5 முதல் வ.சா.ஆ.7 ஆவணம் வரை எனது புகார் மனுக்களில் கூடுதலாக தங்கநகைகள் எதிர்மனுதாரர்கள்

கேட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் அந்த புகார் எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார் என்று தான் புகார் கொடுத்துள்ளேன். சமூக நலத்துறையில் அளிக்கப்பட்டுள்ள மனுவிலும் நீதித்துறை அனுப்பி உள்ள மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஓமலூர் காவல் நிலையத்தில் என் கணவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து உள்ளார் என்று தான் புகார் கொடுத்தேன்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**